# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

<u>ஆணை எண் 44/மா/2025</u>
<u>நாள் 26.03.2026</u>

A. செல்வராஜ்,
சென்னை. --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம் 4
பெருநகர சென்னை மாநகராட்சி.

(2) உரிமையாளர்,
M/s.விக்னேஷ் பார்ட்டி ஹால்,
சென்னை–21.

(3) உரிமையாளர்,
M/s சங்கீதா பார்ட்டி ஹால்,,
சென்னை–21.

(4) உரிமையாளர்,
M/s தேவிபாலா பார்ட்டி ஹால்,
சென்னை–21.

(5) உரிமையாளர்,
M/s M.S. மஹால், சென்னை–21. --- எதிர் மனுதாரர்கள்

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. செல்வராஜ் என்பவரின் 18.12.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2024 அன்று பெறப்பட்டு 44/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

சென்னை, கொருக்குபேட்டை, கோவிந்தசாமி நகர், வ.உ.சி. தெரு, கதவு எண் 32/33 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. A. செல்வராஜ் என்பவர் 18.12.2024 நாளிட்ட தனது மனுவில் இணைத்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 4–ன் மண்டல அலுவலருக்கு முகவரியிட்ட 13.12.2024 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"1) முன்னுதாராகிய நான் மேலே காணும் முகவரியில் நிரந்தரமாக/தற்காலிகமாக (வாடகைக்கு) குடியிருந்து வருகிறேன். நான் சாதாரண கூலி வேலை செய்து ஜீவனம் செய்து வருகிறேன். எனது கோரிக்கை மனுவினை கடந்த 5.2.2024 தேதியன்று அனுப்பி இன்றுடன் 10 மாதம் முடிவடைந்து விட்டது. 300 நாளது தேதி 11.12.2024ம் தேதி வரை எனது கோரிக்கை 1. விக்னேஷ் பார்ட்டி ஹால் 2. சங்கீதா பார்ட்டி ஹால், 3. விக்னேஷ் பார்ட்டி ஹால், ராமானுஜர் ஐயர் தெரு, வேலவன் ROOF TOP பார்ட்டி ஹால், தேவிபாலா பார்ட்டி ஹால், M.S.MAHAL பார்ட்டி ஹால் அரசுக்கு எதிராகவும், அரசை ஏமாற்று நோக்கிலும், அரசுக்கு வரி இழப்பீடு செய்ய அத்துமீறி செயல்பட்டு வருவது மீது

நடவடிக்கை மேற்கொள்ள அரசால் நிறைவேற்றுகை செய்யப்படவில்லை. இது தமிழ்நாடு அரசாணை எண் 73/2018 நாள் 11.6.2018 இல் கண்டுள்ள நெறிகளின்படி இது குற்றமுறு நடவடிக்கையாக கருதப்படுகிறது. மேலும் மேற்காணும் அரசாணை விதிகளுக்கு ஆதரவாக ஒவ்வொரு அரசு அலுவலகங்களும் பொது மக்களிடம் பெறுகின்ற கோரிக்கை மனுவினை 30 தினங்களுக்குள் நிறைவேற்றுகை செய்ய வேண்டும் என்பதை உறுதி படுத்தி சென்னை உயர் நீதிமன்றம் வழக்கு எண் W.P.NO. 20452/2014 and M.P.NO.1/2014 நாள் 01.08.2014 என்ற வழக்கு தீர்ப்புரையில் உறுதி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. மேற்காணும் அரசாணை மற்றும் தீர்ப்பு ஆகியவை எனது இந்த கோரிக்கை மனுவுக்கும் இந்திய அரசியல் அமைப்பு சட்டம் 1950 இன் 14வது பிரிவுப்படி பொருந்தும் என மனுதாரராகிய என்னால் கருதப்பட்டு நீதிமன்ற சாசனமாம் இந்திய சாட்சிய சட்டம் 1872 இன் 159 வது பிரிவுப்படி நினைவூட்டும் முகமாக தங்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

2) மேற்காணும் சங்கதிகள் தமிழ்நாடு அரசு குடிமை பணி விதிகள் 17(2) மற்றும் அரசு ஊழியர் நடத்தை விதிகள் 1975 இன் 20வது பிரிவு படியும் இந்திய தண்டனைச் சட்டம் 1860–ன் 166வது பிரிவு படி தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்பதையும் இதன் மூலம் அறிவிக்கலாற்று.

மனுதாரராகிய எனது கோரிக்கை மனுவினை இந்த அறிவிப்பு தங்களுக்கு கிடைத்த 7 தினங்களுக்குள் நிறைவேற்றும் வகையில் செய்ய தவறும் பட்சத்தில், வீணான அலைக்கழிப்பு செய்ய வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தோடு எனக்கு திருப்தி அளிக்காத பதில் வழங்கினாலும் / பதில் வழங்க தவறினாலும் இந்திய சாட்சிய சட்டம் 1872இன் 106வது பிரிவு படி மேற்கண்ட குற்றச் செயல்களை மறைமுகமாக ஒப்புக் கொள்வதாக கருதப்படும் என்பதையும், மனித உரிமைகள் பாதுகாப்பு சட்டம் 1993ன் படியும் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் வழக்குத் தொடர இதுவேபோதுமான ஆவணமாக கருதப்படும்.

இந்த நினைவூட்டும் விண்ணப்பம் தங்களுக்கு கிடைத்த 7 தினங்களுக்குள் எனது கோரிக்கையை நிறைவேற்றுகை செய்ய தவறும் பட்சத்திலும் அல்லது பதில் வழங்க தவறினாலும் தங்களின் பதில் எனக்கு திருப்தி அளிக்கவில்லை என்றாலும் நீங்கள் உங்களின் கடமையை செய்ய தவறியுள்ளீர்கள் என மனுதாரராகிய என்னால் கருதப்பட்டு நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ள இதுவே ஆவணமாகிவிடும் என்பதையும், அதற்காகும் வேலையிழப்பு வீண் செலவினங்கள்/வருமான இழப்பு மன உளைச்சல் ஆகியவற்றுக்கு தாங்களே தார்மீக பொறுப்பு ஏற்க நேரிடும் என்பதையும் இதன் மூலம் நினைவூட்டப்படுகிறது." எனத் தெரிவித்துள்ளார்.

2) மேலும் மனுதாரர் தன்னுடைய 07.11.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வடசென்னை முழுவதும் 26 பார்ட்டி ஹால் இயங்கி வருகிறது. அதில் 25ம் எந்தவொரு அரசு தரப்பில் எந்த ஒரு ஆவணமும் பெறாமல் அத்துமீறி செயல்படுவதாகவும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் அறிந்து கொண்டேன். அதன் வழியே கும்பகோணம் தீ விபத்து போல் வடசென்னையில் எந்த ஒரு பகுதியும் மக்களும் பொது மக்களும் பாதிக்கப்பட கூடாது என்ற ஒரு நல்ல நோக்கத்துடன் அனைத்து பார்ட்டி ஹால் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தங்கள் மன்றத்தை முறையிட்டு இருந்தேன். அதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சி, காவல் துறை, தீயணைப்புத் துறை, மாசு கட்டுப்பாட்டு வாரியம், சிஎம்டிஏ, எம்எம்டிஏ, தண்டையார்பேட்டை தாசில்தார், சென்னை குடிநீர் கழிவுநீர் வாரியம் போன்ற துறை அதிகாரிகள் மீது சட்டப்படி நடவடிக்கை மேற்கொண்டு அனைத்து பார்ட்டி ஹால் மீதும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தங்கள் முன்பு முறையீட்டு இருந்தேன். அதன்படி அனைத்து துறைகளுக்கும் கடந்த 01.11.2024 வெள்ளிக்கிழமை அன்று அனைத்து துறைகளுக்கும் தங்கள் மன்றத்திலிருந்து நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரக்கோரி அழைப்பாணை அழைக்கப்பட்டுள்ளது. அந்த அழைப்பாணையில் வேலவன் ROOF பார்ட்டி ஹால்

காமராஜர் காலனி, இளைய முதலிய தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை–600 021 என்ற முகவரியில் உள்ள பார்ட்டி ஹாலில் அனைத்துக்கும் ஆவணம் உள்ளது. பார்ட்டி ஹால் பெயரை தவறாக தங்கள் துறை மேற்கொண்டு உள்ளது என்பதையும் தங்கள் முன்பு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, வேலவன் பார்ட்டி ஹால் பெயரை நீக்க கோரி தங்கள் முன்பு பணிவு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 19.02.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. 08.10.2025 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பப்பட்டடும், அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4) எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.02.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 02.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5) மனுதாரர் 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''எனது 05.02.2024 நாளிட்ட புகார் மனுவில் 1. விக்னேஷ் பார்ட்டி ஹால், 2. சங்கீதா பார்ட்டி ஹால், 3. விக்னேஷ் பார்ட்டி ஹால் ராமானுஜர் தெரு, வேலவன் ROOP TOP பார்ட்டி உறால். தேவிபாலா பார்ட்டி ஹால் M.S.MAHAL பார்ட்டி ஹால் ஆகியவை தொழில் வரி மட்டும் செலுத்தி, உரிய உரிமம் மற்றும் தமிழ்நாடு அரசின் மற்ற துறைகளின் பெறப்பட வேண்டிய சான்றிதழ்கள் பெறாமல் இயங்கி வருகின்றன.

இவ்வாறு இயங்கும் பார்ட்டி ஹால்களுக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண் வழங்கப்படவில்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் M.S.MAHAL பார்ட்டி ஹாலின் உரிமையாளர் நான் பணம் பெற்று வந்ததாக பொய்யான குற்றச்சாட்டு தெரிவித்ததை தொடர்ந்து அவர் மீது மான நஷ்ட வழக்கு தொடர்வேன் என்ற விவரத்தையும் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

6) எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் முதுநிலை வருவாய் அலுவலர் 13.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் தெரிவித்த கொருக்குப்பேட்டை மண்டலம் 4–ல் இயங்கி வரும் பார்ட்டி ஹால்களுக்கு இதுவரை உரிமம் வழங்கவில்லை. உரிமையாளர்களும் இதுகுறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–4ற்கு விண்ணப்பம் அளிக்கவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து தொழில் வரி மட்டும் வசூல் செய்யப்பட்டு வருகிறது. பார்ட்டி ஹால்கள் செலுத்திய தொழில் வரி ரசீதின் நகல்களை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

மனுதாரர் புகார் தெரிவித்ததை தொடர்ந்து மண்டலம்–4ல் உரிமம் இன்றி இயங்கி வரும் பார்ட்டி ஹால்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி சட்டம், 1998–ன்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7) மூன்றாம் எதிர்மனுதாரர், நான்காம் எதிர்மனுதாரர் மற்றும் ஐந்தாம் மனுதாரர் சார்பாக வழக்கறிஞர் ப.அசாரூதின் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரரான திரு.செல்வராஜ் என்பவர் M.S.மஹாலின் உரிமையாளர் திரு.Y.உஸ்மான் என்பவரிடம் புகாரிலிருந்து அவரது மண்டபத்தின் பெயரை நீக்கும் பொருட்டு ரூ.2.50 இலட்சம்

கேட்டதாக எனது கட்சிக்காரர் தெரிவித்ததை இம்முறைமன்றத்தில் முறையீட்டாக தெரிவிக்கிறேன்.

மனுதாரர் புகார் தொடர்பாக மேற்கண்ட பார்ட்டி ஹால்களுக்கு உரிமம் பெற விண்ணப்பம் அளித்த போது பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட பார்ட்டி ஹால்களின் உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் அலுவலகத்தில் தொழில் உரிமம் பெற விண்ணப்பம் அளிக்க தயாராக உள்ளார்கள். அவ்விண்ணப்பம் அளிக்கும் போது கோரப்படும் பார்ட்டி ஹால்களுக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் என்ற விவரத்தினை முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

8) ஐந்தாம் எதிர்மனுதாரர் Y.உஸ்மான் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் புகார் தொடர்பாக நான் மனுதாரரை தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது இது குறித்து பேசி தீர்க்கலாம் என்று கூறி ஒரு இடத்திற்கு அழைத்தார். அங்கு உங்கள் மீதான எனது புகாரினை வழக்கிலிருந்து நீக்கம் செய்து விடுகிறேன். அவ்வாறு நீக்கம் செய்வதற்கு எனக்கு ரூ.2.50 இலட்சம் தர வேண்டும் என்று கூறினார். ஆனால், என்னால் தர இயலாது என தெரிவித்து விட்டேன். எனவே மனுதாரர் என்னிடம் ஆதாயம் பெறும் நோக்கத்தில் மேற்கண்ட புகாரினை அளித்துள்ளார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்''.

எங்கள் பார்ட்டி ஹாலுக்கு தொழில் உரிமம் பெற பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ல் விண்ணப்பம் அளிப்பது தொடர்பாக சென்ற போது பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற தீர்மானத்தின் அடிப்படையில் தொழில் உரிமம் பெறலாம் என்று தெரிவித்தார்கள்.

எங்கள் பார்ட்டி ஹாலுக்கு தொழில் உரிமம் கோரி உரிய ஆவணங்களுடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–க்கு விண்ணப்பம் அளிக்க தயாராக உள்ளேன் என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

9) இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 13.02.2026 அன்று நடைபெற்ற விசாரணைக்கு யாரும் ஆஜராகவில்லை.

10) மனுதாரரின் மனுக்கள், வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் மூன்றாம் எதிர்மனுதாரர், நான்காம் எதிர்மனுதாரர், ஐந்தாம் எதிர்மனுதாரர் ஆகியோர் சார்பாக விசாரணைக்கு ஆஜரான வழக்கறிஞர் திரு. ப.அசாருதின் என்பவரின் வாக்குமூலம் மற்றும் ஐந்தாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

05.02.2024 நாளிட்ட மனுதாரரது புகார் மனுவில் (1) விக்னேஷ் பார்ட்டி உறால், (2) சங்கீதா பார்ட்டி உறால், (3) விக்னேஷ் பார்ட்டி ஹால், ராமானுஜர் தெரு, (4) வேலவன் ROOP TOP பார்ட்டி உறால் (5) தேவிபாலா பார்ட்டி ஹால் மற்றும் (6) M.S.MAHAL பார்ட்டி ஹால் ஆகியவை தொழில் வரி மட்டும் செலுத்தி, உரிய உரிமம் மற்றும் தமிழ்நாடு அரசின் மற்ற துறைகளில் பெறப்பட வேண்டிய சான்றிதழ்கள் பெறாமல் இயங்கி வருகின்றன என்பதும், இவ்வாறு இயங்கும் பார்ட்டி ஹால்களுக்கு எதிராக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண் வழங்கப்படவில்லை என்பதும், M.S.MAHAL பார்ட்டி ஹாலின் உரிமையாளர் மனுதாரர் பணம் கோரியதாக பொய்யான குற்றச்சாட்டு தெரிவித்ததை தொடர்ந்து அவர் மீது மான நஷ்ட வழக்கு தொடர்வேன் என மனுதாரர் தெரிவித்துள்ளார் என்பதும், வேலவன் ROOF பார்ட்டி ஹால் காமராஜர் காலனி, இளைய முதலிய தெரு, கொருக்குப்பேட்டை, சென்னை–600 021 என்ற

முகவரியில் உள்ள பார்ட்டி ஹாலில் அனைத்துக்கும் ஆவணம் உள்ளதால், வேலவன் பார்ட்டி ஹால் பெயரை முறையீட்டு மனுவிலிருந்து நீக்க கோரியுள்ளதும் மனுதாரரின் மனுக்கள் மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் தெரிவித்த கொருக்குப்பேட்டை மண்டல 4–ல் இயங்கி வரும் பார்ட்டி ஹால்களுக்கு இதுவரை உரிமம் வழங்கவில்லை என்பதும், உரிமையாளர்களும் இதுகுறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–4ற்கு விண்ணப்பம் அளிக்கவில்லை என்பதும், ஆனால் அவர்களிடமிருந்து தொழில் வரி மட்டும் வசூல் செய்யப்பட்டு வருகிறது என்பதும், மனுதாரர் புகார் தெரிவித்ததை தொடர்ந்து மண்டலம்–4ல் உரிமம் இன்றி இயங்கி வரும் பார்ட்டி ஹால்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998–ன்படி உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் முதுநிலை வருவாய் அலுவலரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர், M.S.மஹாலின் உரிமையாளர் திரு.Y.உஸ்மான் என்பவரிடம் புகாரிலிருந்து அவரது மண்டபத்தின் பெயரை நீக்கும் பொருட்டு ரூ.2.50 இலட்சம் கேட்டதாக தனது கட்சிக்காரர் தெரிவித்ததை இம்முறைமன்றத்தில் முறையீட்டாக தெரிவிக்கப்பட்டது என்பதும், மனுதாரர் புகார் தொடர்பாக மேற்கண்ட பார்ட்டி ஹால்களுக்கு உரிமம் பெற விண்ணப்பம் அளித்த போது பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்றத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4 அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டது என்பதும், மேற்கண்ட பார்ட்டி ஹால்களின் உரிமையாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் அலுவலகத்தில் தொழில் உரிமம் பெற விண்ணப்பம் அளிக்க தயாராக உள்ளார்கள் என்பதும், அவ்விண்ணப்பம் அளிக்கும் போது கோரப்படும் பார்ட்டி ஹால்களுக்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படும் என்பதும் எதிர்மனுதாரர்களான M.S.மஹாலின் உரிமையாளர், தேவி பாலா பார்ட்டி ஹாலின் உரிமையாளர், மற்றும் சங்கீதா பார்டி ஹாலின் உரிமையாளர் ஆகியோர் சார்பாக வழக்கறிஞர் திரு. ப.அசாரூதின் என்பவரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் M.S.மஹால் மீதான தனது புகாரினை வழக்கிலிருந்து நீக்கம் செய்து விடுவதாகவும், அதற்கு மனுதாரருக்கு ரூ.2.50 இலட்சம் தர கோரியது என்பதும், ஆனால், தன்னால் தர இயலாது என்பதும், தங்கள் பார்ட்டி ஹாலுக்கு தொழில் உரிமம் கோரி உரிய ஆவணங்களுடன் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–க்கு விண்ணப்பம் அளிக்க தயாராக இருப்பதாக ஐந்தாவது எதிர்மனுதாரரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் (1) விக்னேஷ் பார்ட்டி உறால், (2) சங்கீதா பார்ட்டி உறால், (3) விக்னேஷ் பார்ட்டி ஹால், ராமானுஜர் தெரு, (4) தேவிபாலா பார்ட்டி ஹால் மற்றும் (5) M.S.MAHAL பார்ட்டி ஹால் மற்றும் காமாஜர் காலனி, இளைய முதலி தெருவில் இயங்கும் வேலவன் ROOF TOP பார்ட்டி ஹால் ஆகியவை உரிமம் இல்லாமல் இயங்குவதால் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் 18.12.2024 நாளிட்ட மனுவில் கோரியிருந்தார். பின்னர் தனது 21.05.2025 நாளிட்ட படிவம்–1ல் இணைத்துள்ள 07.11.2024 நாளிட்ட மனுவில் வேலவன் ROOF TOP பார்ட்டி ஹால் உரிய ஆவணங்களுடன் இயங்கி வருவதால், அதனை தனது புகார் மனுவிலிருந்து நீக்கம் செய்யுமாறு கோரியிருந்தார். அனைத்து இனங்களையும் (ROOF TOP பார்டி ஹால் உட்பட) விதிமுறைகள்படி இயங்குகிறதா என்பதை பார்க்க வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு உள்ளது.

எனவே, இந்நேர்வில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–4ல் இயங்கி வரும் பார்ட்டி ஹால்களை கள ஆய்வு செய்து, மேற்கண்ட வணிக நோக்குள்ள கட்டிடங்கள் சட்டவிதிமுறைகளின்படி முறையாக கட்டப்பட்டுள்ளதா என்றும், உரிமம் பெறப்பட்டுள்ளதா என்பது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு 3 மாதங்களுக்குள் அறிக்கை அனுப்பிட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–ன் மண்டல அலுவலரை அறிவுறுத்துமாறும், மேற்கண்ட அறிக்கையின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், பெருநகர

சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள்26–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. A. செல்வராஜ் (எ) R.T.I. செல்வம்,
நெ. 32/33 வ.உ.சி. தெரு, கோவிந்தசாமி நகர்,
கொருக்குப்பேட்டை, சென்னை–600 021.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண்266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை 600 021.

(4) உரிமையாளர்,
M/s.விக்னேஷ் பார்ட்டி ஹால், ராமானுஜர் ஐயர் தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை–600 021.

(5) உரிமையாளர், M/s சங்கீதா பார்ட்டி ஹால்,
ராமானுஜர் ஐயர் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை–600 021.

(6) உரிமையாளர்,
M/s தேவிபாலா பார்ட்டி ஹால்,
3, கண்ணன் தெரு, மீனாம்பாள் நகர்–குமாரசாமி நகர்,
பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–600 021.

(7) உரிமையாளர்,
M/s M.S. மஹால், முத்தையா முதலி தெரு,
பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை–600 021

(8) கண்காணிப்பாளர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி, ரிப்பன் மாளிகை,
சென்னை 600 003.

<u>நகல்:</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்.
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

30/3/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032